# விலை கட்டுப்பாடு அமுல்: மக்கள் நிறுவனங்களுக்கு அதிகாரம்!


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 246
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 29 ஷஃபான் 13 வியாழக்கிழமை (15-10-70)










## வர்த்தக அமைச்சர் முடிவு

கொழும்பு, புதன்

பாவனைப் பொருட்க ளுக்குரிய விலைக்கட்டுப் பாட்டை மீறும்வர்த்தகர் களைக் கண்காணிக்க மக் கள் ஸ்தாபன அங்கத்த வர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவிருக்கிறது. வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின இந்த முடிவைச் செய்துள் ளார்.

விலைக்கட்டுப்பாட்டு பரி சோதகர்களுக்குள்ள அதிகா ரங்கள் இவர்களுக்குவழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்தாண்டு ஜனவரிமுதல் இந்த முடிவு அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கிராமசபைகள், சமாதான சபைகள், கிராமமுன்னேற் றச்சங்கங்கள், சனசமூகநிலை யங்கள்போன்றவற்றிலுள்ள அங்கத்தவர்களுக்கும் இந்த அதிகாரம் வழங்கப்படவுள் ளது.

### வேண்டுகோள்

பாவனைப் பொருட்களின் விலைக்கட்டுப்பாட்டை மீறும் வியாபாரிகளைக் கண்காணி த்து, அவர்களைப்பற்றிய தக வல்களைத் தெரியப்படுத்து மாறு, சகல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

விலைக்கட்டுப்பாட்டை மீறுபவர்கள்மீது சட்டநட வடிக்கை எடுப்பதற்குப் போதிய அதிகாரிகள் ஈடு படுத்தப்படாததினால், நாடு பூராவிலுமுள்ள பலவியாபா ரிகள் அப்பாவி ஏழைமக் களிடம் கொள்ளை லாபம் அடிப்பதாக அரசாங்கத் துக்கு தகவல்கள் கிடைத்த வண்ணமிருக்கின்றன. இதைக் கட்டுப்படுத்துமுக மாக வர்த்தக அமைச்சு பலஉயர்தர அரசாங்க ஊழி யர்களுக்கு மேலதிக அதிகா ரங்களை வழங்கியுள்ளது. கட்டுப்பாட்டு விலைகளை மீறு பவர்கள் மீது சட்ட நடவ டிக்கை எடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட் டுள்ளது.

அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கச்சேரி நிர்வாக அதிகாரி கள், காரியாதிகாரிகள், பொலிஸ் சுப்பிரின்டன்கள், உதவிபொலிஸ்சுப்பிரின்டன் கள், பொலிஸ் இன்ஸ்பெக் டர்கள், கல்வி டைரக்டர் கள், கல்விபரிசோதகர்கள், மின்சார பொறியியலாளர் கள், உணவு விற்பனை இலாகா உதவிக்கமிஷனர் கள், சுகாதார அத்தியட்ச கர்கள், கிராமிய அபிவிருத்தி அதிகாரிகள், சுங்க இலாகா உதவி வரியிறுப்பாளர்கள், வீடமைப்பு இலாகாஉதவிக் கமிஷனர்கள், உள்ளூராட்சி உதவிக்கமிஷனர்கள், உதவி வர்த்தக டைரக்டர்கள், சமூகசேவைகள் இலாகா உதவி டைரக்டர்கள், தொழில் அதிகாரிகள் ஆகி யோருக்கே வர்த்தக அமை ச்சு இந்த அதிகாரத்தை வழங்கியுள்ளது.

# மாணவர்களை அரசியலுக்கு இழுத்தால் கடும் தண்டனை!

## ஆசிரியர்களுக்கு கல்வி மந்திரி எச்சரிக்கை



கொழும்பு, புதன்

"பாடசாலைகளில் மாண வர்களை அரசியலில் ஈடு படுத்தினால் ஆசிரியர்க ளுக்குத்தகுந்த தண்டனை வழங்கப்படும். அரசியல் விஷயங்களை ஆசிரியர்கள் பாடசாலைக்கு வெளியே வைத்துக் கொள்ளவேண் டும்" என இங்கு நேற்று நடைபெற்ற ஆசிரியர் சங்கப் பொன்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றிய கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

அகில இலங்கை ஆசிரி யர் சங்க- தேசிய ஆசிரியர் சங்கப் பொன்விழா கொள் ளுப்பிட்டியிலுள்ள சென். தோமஸ் கல்லூரியில் நடை பெற்றபோது அமைச்சர் கலந்து கொண்டு உரையாற் றினார். அமைச்சர் தமது பேச்சில் கூறியதாவது:

"ஆ[illegible]யர்கள்தமது அரசியல் உரி[illegible]மையைத் துர்ப்பிரயோ கம் செய்யக்கூடாது. தமது கடமைகளை அவர்கள் செவ் வனே செய்யும்பட்சத்தில் உரிமைகள் வழங்குவதில் நாம் முன்னிற்போம்.

### சோஷலிஸ திட்டம் தேவை

"தேசிய கல்வித்திட்டம் எமக்குத்தேவையில்லை. அது பழங்கதையாகிவிட்டது. சோஷலிஸ கல்வித்திட்டமே தேவை. சகல பாடசாலை[illegible]ளி லும் தாய்மொழி[illegible]ய போதனா மொழியாகக் கொண்டுவந்துவிட்டோம். இவ்விஷயத்தில் பல்கலைக் கழகங்களில் மட்டும் சில பிரச்னைகளுண்டு. அதையும் விரைவில் நிவர்த்திசெ[illegible]து விடுவோம்.

யில், இது ஒரு பெரும் பிரச்னையென்றும், இப் போது ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைகளும் பெற்று புதிய இடமாற்றத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாயும், தகுந்த காரணங்களுட னேயே இடமாற்றங்கள் நிகழுமென்றும், புதியதிட் டத்திற்கு ஆசிரியர்கள் ஒத் துழைப்பு அளிக்கவேண்டு மென்றும் சொன்னார்.

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக மாணவர்களி னால் நடத்தப்படும் கிளர்ச்சி கள், பகிஷ்காரங்கள் கவ னிக்கப்படமாட்டாதென் றும், கல்விப்பகுதியின் முடிவே இறுதியானதென் றும் அமைச்சர் தெரிவித் தார்.

## 'சமூக பிரச்னைகளையும் ஆசிரியர் கவனிக்க வேண்டும்'

## கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்புபற்றி விளக்கம்

மாவிட்டபுரம், புதன்

"கூட்டுறவுச் சங்கங்களின் புதிய புனரமைப்புத் திட் டத்தின் படி சமாசங்கள் மூடப்பட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கூ. மொ. வி. ஸ்தாபனத்திடம் இருந்து பொருள்களை நேர டியாக கொள்வனவு செய்ய வழி ஏற்படுமானால் சகல பொருட்களின் விலைகளும் குறையலாம்'

இவ்வாறு யாழ். கூட்டுற வுப் பகுதி காரியாலய அதி காரி திரு. வி. பாலசுந்தரம் காங்கேசன்துறை நடேஸ் வராக் கல்லூரி மண்டபத் தில் நடந்த கூட்டுறவு சங் கங்களின் புனரமைப்புத் திட்டப் பிரசாரக் கூட்டத் தில் பேசுகையில் கூறினார்.

காங்கேசன்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க [illegible] டையும் நிலையேற்படும். கூட்டுறவுத் துறையை முன் னேற்ற எடுக்கப்படும் இத் திட்டம் பற்றி சகல மக்க ளும் ஒத்துழைப்புக் கொடு த்து மேலும் இயக்கத்தை வளர்க்க உதவ வேண்டிய தவசியம்.

பொருளாதார விருத்தியி னாற்றான் சங்கங்கள் முன் னேற முடியும். மக்களும் பயனடைவர் எத்தனையோ சங்கங்கள் பொருளாதார வளமின்யால் அழியும்நிலைக் குள்ளாகியுள்ளன. ஆகவே எதிர்காலத்தில் பொருளா தாரவிருத்திக்கான திட்டங் களை வகுக்க வேண்டும் கூட் டுறவு சங்கங்களின் மனேஜ ர்கள் மற்றும் பணியாட்களை ஒரு கடையில் இருந்து மற் றக் கடைக்கு இடமாற்றம் செய்யும் திட்டமும் வகுக் கப்பட வேண்டும்.

காலி ரயில் நிலையத்தின் முன்

## ஒருவர் சுட்டுக் கொலை; துப்பாக்கி கண்டுபிடிப்பு

காலிபுதன்,

8 பிள்ளைகளின் தந்தைஒரு வர் சுட்டுக்கொலலப்பட்ட சம்பவம் ஒன்று காலியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுள்ளது. காலி புகையிரதத்துக்கு முன்னால் நடைபெற்ற இச்சம்பவத் தில் பலியானவர் பிரேம தாசா எதிர்சிங்கா (வயது 38) என்பவராகும்.

[illegible] ரைக் துப்பாக்கியினால் சுட் டதாகவும் விசாரணையில் தெரியவந்தது. மரணமான வரின் கீழ்கடமையாற்றி வந்த, ஜினதாசாவீரதுங்கா சாட்சியமளித்தார். பிய சேன என்பவரும் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டார்.

தத்காலிக மாஜிஸ்திரேட் திரு. [illegible] விக்கிரமசிங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராக் கல்லூரி மண்டபத்தில் நடந்த கூட்டுறவு சங்கங்களின் புனரமைப்புத் திட்டப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

காங்கேசன்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆதரவில் நடந்த இக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:

தற்போதைய அரசினால் வகுக்கப்பட்ட கூட்டுறவு புனரமைப்பு திட்டம் மக்களின் நிர்வாகமாக இவ்வியக்கத்தை மாற்ற முதல்படியாக அமைந்துள்ளது. இத் திட்டப்படி குறிப்பிட்ட ஓர் இடத்தில் பெரிய பலநோக்கு சங்கங்களையும் கிளைகளையும் அமைப்பதனால் சகல பகுதி மக்களும் பயன எதிர்காலத்தில் பொருளாதாரவிருத்திக்கான திட்டங்களை வகுக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் மனேஜர்கள் மற்றும் பணியாட்களை ஒரு கடையில் இருந்து மற்றக் கடைக்கு இடமாற்றம் செய்யும் திட்டமும் வகுக்கப்படவேண்டும்.

காங்கேசன்துறைபட்டின சபை முன்னாள் தலைவர் திரு மு. திடவீரசிங்கமும் பேசுகையில் வெங்காய உற்பத்தியில் ஆனையிறவுதடைமுகாம் இருப்பதால் வட பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். பி: செல்லத்துரை உட்பட பலர் பேசினர்.

கலந்துகொண்டு உரை உரிமையைத் துர்ப்பிரயே

## ‘சமூக பிரச்னைகளையும் ஆசிரியர் கவனிக்க வேண்டும்’

— பாலாதம்பு

கொழும்பு, புதன்

''தமது பிரச்னைகளில் மட்டும் ஆசிரியர்கள் கவனம் செலுத்தக்கூடாது. சமூகப் பிரச்னைகளையும் ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும்.''

இவ்வாறு நேற்றுக்காலையில் தேர்ஸ்டன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ஆசிரியர் சங்க வருடாந்தக்கூட்டத்தில் விசேஷமாகக் கலந்துகொண்டு பேசிய இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்க பொதுச் செயலாளர் திரு. பாலா தம்பு தமதுரையில் கூறினார்.

''தீர்மானங்கள் நிறைவேற்றுவதால் எவ்வித பயனுமில்லை. தீர்மானங்கள் நிறைவேற்றிவிடுவதனால் பிரச்னைகள் தீர்ந்துவிடாது. ஆசிரியர்கள் சமூகத்துடன் ஒன்றிவாழ்பவர்கள். சமூகப் பிரச்னைகளிலும் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்'' என்று திரு. பாலா தம்பு கூறினார்.

மொழி, பிரச்னைக்குக் காலாக இருக்கக்கூடாது. பிரச்னைக்குரியனவாக வேறு பலவிஷயங்களுண்டு. மொழியைப் பிரச்னை ஆக்காதீர். சிங்களவர் தமிழையும், தமிழர் சிங்களத்தையும் கற்பதற்கு முன்வரவேண்டும் என திரு. பாலா தம்பு கேட்டுக் கொண்டார்.

சங்கத்தின் புதிய உத்தியோகத்தர் தெரிவில் திரு. எல். எம்: பெரேரா தலைவராகவும், திருவாளர்கள் எட்வர்ட் வீரசேகரா, எஸ். மகேசன் எக்கநாயக்கா ஆகியோர் உபதலைவர்களாகவும், திரு. டபிள்யு. ஜி. அன்னப்ப பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

[illegible] தவை. சகல பாடசாலை[illegible]லும் தாய்மொழி[illegible]ய போதனா மொழியாகக் கொண்டுவந்துவிட்டோம். இவ்விஷயத்தில் பல்கலைக்கழகங்களில் மட்டும் சில பிரச்னைகளுண்டு. அதையும் விரைவில் நிவர்த்தி[illegible] விடுவோம்.

ஆங்கிலம் உலக மொழி. சகல பாடசாலைகளிலும், கிராமப்புற மாணவர்களும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள வழிசெய்துள்ளோம்.''

### இடமாற்றம்

ஆசிரியர்களின் இடமாற்றம் பற்றி அமைச்சர் அல்ஹாஜ் மஹ்மூத் பேசுகை

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக மாணவர்களினால் நடத்தப்படும் கிளர்ச்சிகள், பகிஷ்காரங்கள் கவனிக்கப்படமாட்டாதென்றும், கல்விப்பகுதியின் முடிவே இறுதியானதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### புதிய கமிஷன்

''தேசிய உயர்கல்விச் சபை ஒழிக்கப்படும். பதிலாக ‘பல்கலைக்கழக கிராண்ட் கமிஷன்’ இடம் பெறும், பல்கலைக்கழகப் பிரவேசத்தில் இனிமேல் இன மதபாரபட்சம் இருக்

(4-ம்பக்கம் பார்க்க)

8 பிள்ளைகளின் தந்தை ஒருவர் சுட்டுக்கொலைப்பட்ட சம்பவம் ஒன்று காலியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுள்ளது. காலி புகையிரதத்துக்கு முன்னால் நடைபெற்ற இச்சம்பவத்தில் பலியானவர் பிரேமதாசா எதிர்சிங்கா (வயது 38) என்பவராகும்.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் எதிர்சிங்கா காலமானதாகவும், இறந்தவர் ரயில் நிலையத்திலுள்ள ‘பாரி’லில் இருந்து வெளியேறிவந்து அவரது லொறியில் ஏறியிருந்த போது அதற்கு முன்னால் வந்துகொண்டிருந்த ஜீப்பில் இருந்த ஒருவர் இறந்தவ டதாகவும் விசாரணையில் தெரியவந்தது. மரணமானவரின் கீழ்கடமையாற்றி வந்த, ஜினதாசா வீரதுங்கா சாட்சியமளித்தார். பியசேன என்பவரும் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தற்காலிக மாஜிஸ்திரேட் திரு. றெக்ஸ் விக்கிரமசிங்கா ஸ்தலவிசாரணை நடத்தினார். டாக்டர் என். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை நடத்தினார்.

சம்பவம் நடைபெற்ற ஒருமைல்தூரத்தில் துவக்கு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## ஒரே பாடசாலையில் 36 ஆண்டு கால சேவை

யாழ்ப்பாணம், வியா

ஒரே பாடசாலையிலேயே முப்பத்தாறு ஆண்டுகாலம் சேவையாற்றிய பெருமை ஓய்வுபெறும் இந்த ஆசிரியருக்கு உண்டு. தனதுசேவை காலத்தில் மற்றெல்லாருக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவுத் வழிகாட்டியாகவும் வாழ்ந்தார். இவரது கல்விச் சேவை அளப்பரியது.'

இவ்வாறு கைதடி நுணுவில் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியராகப்பணியாற்றி ஓய்வுபெற்ற திரு வே, செல்லையாவின் சேவையைப் பாராட்டி நடந்த விழாவில் மைற் ஸ்தாபன அதிபர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா பேசுகையில் கூறினார்.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு ஆ. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா மேலும் பேசுகையில் காலஞ்சென்ற வைத்தியர் அப்பா வெற்றிவேலு இப் பாடசாலையை ஸ்தாபித்ததிலிருந்து ஆசிரியர்செல்லையா இங்கு பணியாற்றுகிறார் என்றும் மாணவர்களுக்கு உண்மையான கல்வித் தொண்டினை ஆற்றுவதையே தமது லட்சியமாகக் கொண்டு செயலாற்றி வந்துள்ளாரென்றும் ‘குணக்குன்று என்றும் கூறினார்.

தலைமைவகித்த தலைமை ஆசிரியர் திரு ஆ. அருணாசலம் தமது தலைமையுரையில் ஆசிரியர் செல்லையாவின் உயரிய பண்புகளைக் குறிப்பிட்டு வெகுவாகப் பாராட்டிப் பேசினார்,

இவ் வைபவத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு டாக்டர் கே. மகாதேவா ‘பொற்கிழி’ வழங்கினார். ஆசிரியர் திலகம் என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது.

மற்றும் திருவாளர்கள் க, சின்னத்துரை த. கனகரத்தினம் எஸ். கே. திரவியநாயகம் வெ. [illegible]கந்தசாமி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். ஆசிரியர் திரு த. கனகலிங்கம் நன்றிகூறினார்.

(கு. வி. ம)

# தலைமன்னர் தடுப்பு முகாமில் ஏழுபேர்தான் உள்ளனர்

## ‘வயர்லஸ்’ தொடர்பு ஏற்படலாம்’

யாழ்ப்பாணம், வியாழன்

தலைமன்னர் தடுப்பு முகாமில் இப்போது சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஏழுதான்! மிகப்பெருந் தொகையானோர், அடைத்து வைக்கப்பட்டு’ இட நெருக்கடி காரணமாகப் பலராலும் குறை கூறப்பட்டுவந்த இந்த முகாமில் இப்போது மிகக் குறைந்த தொகையினரே இருப்பதால் அந்த முகாம் இனியும் அவசியம் தானா? என்றகேள்வியும் சில வட்டாரங்களில் எழுந்துள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றக் காரர் என்ற சந்தேகத்தின்மீது இத் தடுப்பு முகாமுக்கு அனுப்பப் படுபவர்கள் பற்றி துரிதமாக விசாரணைகள் நடைபெற்று சந்தேகம் நிரூபிக்கப்பட்டதும் அவர்கள் தாமதமின்றி நாடுகடத்தப்பட்டு வருவதும், சந்தேகம் நிரூபிக்கப்படாதபட்சத்தில் அவர்கள் விரைவாக விடுதலை செய்யப்பட்டு வருவதும் இந்த முகாமில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் மீது தடுத்து வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதற்கு ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது.

இதேசமயம் சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு அக்கரையில் இந்திய அரசாங்கம் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதும் இதே போல இக்கரையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையாலுமே கடந்த சில மாதங்களாக சட்டவிரோதக் குடியேற்றக் காரர் குறைந்துள்ளதற்கு ஒரு காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

எனினும் இப்போதைக்கு இந்த முகாம் மூடப்படமாட்டாதென்றும் கூறப்படுகிறது,

மண்டபத்தில் இலங்கை இந்திய அதிகாரிகளுக்கிடையில் சமீபத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் இருநாட்டு அரசாங்கங்களும் சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவைகளை மேலும் தடுப்பதற்கான கூட்டு நடவடிக்கைகள்பற்றி ஆராய்ந்ததாகத் தெரிகிறது.

சட்டவிரோதக் குடியேற்றம் கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைக்கு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ‘வயலஸ்’ தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென இந்திய அதிகாரிகள் யோசனை தெரிவித்ததாகவும் இந்த யோசனை இப்போது இலங்கை அரசாங்கத்தின் பரிசீலனையிலிருப்பதாகவும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டால் இரு நாட்டு பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் ‘வயலஸ்’ தொடர்பு ஏற்படுத்தப்படு மென்றும் அறியப்படுகிறது.

## கடை உடைத்து திருட்டு

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு பிரதான வீதியிலுள்ள கடை ஒன்றில் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். கூரையைப் பிரித்து பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக சங்கானைப்பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

# அவிசாவளை, கேகாலை வெள்ளக் காடு!

கோட்டை, புதன்

கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையினால் அவிசாவளை, கேகாலைமாவட்டங்களில் பலத்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது

இப்பகுதி ஆறுகளிலும் நீர் நிரம்பிவழிவதால் போக்குவரத்துப் பாதைகள்யாவும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. புகையிரத சேவையைவிட மற்றும் போக்குவரத்து சேவைகள் யாவும் இம்மாவட்டங்களில் ரத்துச் செய்யப்பட்டுள்ளன இம்மாவட்டங்களின் கச்சேரி, பொலிஸ் பகுதிகளில் இருந்து கிடைத்த தகவலின்படி இப்பகுதிகளில் மூன்றரை அடி வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கடுமையாகப் பெய்த மழையையடுத்து ஹினிகத்தனை, ஹட்டன் வீதியில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. தலவாக்கொல்லைப் பகுதியிலும் அதையடுத்துள்ளஇடங்களிலும் போக்கு வரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அவிசாவலையில் 3·5 அங்குல மழையும், குருநாகலை, மிகிந்தலைப் பகுதிகளில் 2 அங்குலத்துக்கும் மேற்பட்ட மழையும் பெய்துள்ளதாக கொழும்பு காலநிலையவதான நிலையம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவின் தென்மேற்குபகுதியில் குறைந்தஅமுக்க சீதோஷ்ணநிலை நிலவுவதாகவும் இதன் காரணமாகவே இலங்கையில் பரவலாக எங்கும் மழைபெய்வதாகவும்கொழும்பு காலநிலையவதான நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

### இலங்கையில்

## ஈராக் தூதரகம்

கோட்டை, புதன்

கொழும்பில் வெகுவிரைவில் ஈராக் தனது தூதரகத்தை நிறுவவிருக்கிறது. இவ் வருடமுடிவிற்குள் அல்லது அடுத்தாண்டுமுதற்பகுதியில் இது நிறுவப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையும் பக்தாத்தில் ஒரு தூதரகத்தை நிறுவவிருக்கிறது.

### அபிவிருத்தித்திட்டங்களுக்கு

## மக்களின் பங்கை பூரணமாகப் பெற ஏற்பாடு

கோட்டை, புதன்

அபிவிருத்தித்திட்டங்களில் மக்கள் பங்கைப் பூரணமாகப் பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. இதன் முதல் நடவடிக்கையாக கிராமங்கள் தோறும் கிராமிய அபிருத்திச் சபைகளை அமைக்கவிருக்கிறது.

இச்சபைகளின் மூலம் கிராமங்களின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்தலே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்,

அரசாங்கம் தான் வகுக்கும் அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அமைச்சுகளிடமும் ஒப்படைக்கவுள்ளது. இத்திட்டங்களையெல்லாம் செயற்படுத்துவதற்கு ஒவ்வொரு அமைச்சிலும் திட்ட, ஆலோசனைப் பிரிவுகள் அமைக்கப்படும். இப்பிரிவுகளில் உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்கள் இடம்பெறுவார்கள்,

மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராயவும் அவை குறித்து ஆலோசனை வழங்கவும் சர்வதேச தொழில் ஸ்தாபன குழுவொன்றும் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு வரவிருக்கிறது,

# “சாதியை ஒழித்துத்தான் சமத்துவம் காணமுடியும்”

— கோப்பாய் எம். பி

யாழ்ப்பாணம், வியாழன்

''சாதிப் பாகுபாட்டை, சாதியை ஒழித்துத்தான் சமத்துவம் காணமுடியுமேயொழிய, இன்று சிலர் கருதுவதுபோல் சாதியை வைத்துச் சமத்துவம் காணமுடியாது'' என்று கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை நேற்று மாலை ஆரியகுளத்தடி சன்மார்க்க வாலிபர் சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட தியாகி முதலி சின்னத்தம்பியின் 26 து வருடாந்த நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சன்மார்க்க சங்கத் தலைவர் திரு. என். குருநாதர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

முதலாளித்துவ அமெரிக்காவில்கூட, சாதியை ஒழித்துத்தான் சமத்துவம் காணமுடியுமென்பதை உணர்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும், இச்சமயத்தில் சாதியை வைத்துச் சமத்துவம் காணமுடியும் என இங்கு சிலர் தவறாக நினைக்கிறார்கள் என்றும் திரு. கதிரவேலுப்பிள்ளை கூறினார்.

திரு, கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:

''கடந்த 40, 50 வருடங்களாகச் சீர்திருத்தவாதிகளும் சாதிப்பாகுபாட்டை ஒழிக்கவேண்டுமென்று கூறி வந்தார்கள். ஆனால் இது மக்கள் இயக்கமாக மாறவில்லை, அமரர்களான வன்னியசிங்கமும், இராஜவரோதயமும் எடுத்த முயற்சிகளின் விளைவாக 1957ம் ஆண்டில் சமூகக் குறைபாட்டுச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அச்சட்டமும் போதியதல்ல ஆனாலும் அது ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. நாட்டைவிட்டுச் சாதியையே முற்றாக ஒழிக்கவேண்டுமென்று நாம் கூறுகின்றோம். இப்படி ஒழிக்கும்பொழுது இடைப்பட்ட காலத்தில் பின்தங்கிய நிலையிலிருப்பவர்களின் முன்னேற்றத்திற்குச் சில சலுகைகள் அளிக்கப்படவேண்டும்.

முதலாளித்துவ நாடான அமெரிக்காவில்கூட, பிரித்து வைத்துச் சமத்துவம் காண

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதியும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. விபரங்களுடன் விளம்பர இல 2408, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 2408

விற்பனைப் பிரதிநிதிகள் இருவர் பிணைப்பணம் ரூபா 250/- (இருநூற்றைம்பது) கட்டக்கூடியவர்கள் உடனே நேரில் வரவும். ஆர். டி. என். ஸ்ரோஸ் அன் சேல்ஸ் ஏஜென்ஸி 84, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம். 2335

### விற்பனைக்கு

சாவகச்சேரி மகா மகளிர் பாடசாலைக்கருகாமையில் வீடு கட்டுவதற்குக் காணிகள் 2,3,4 பரப்பில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: மு. குமாரசாமி, கண்டுவில் வீதி, சாவகச்சேரி. 2336

### கல்வி

ஜி. சீ. ஈ. (சாதாரணம்) தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பாடங்களுக்கான வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன யூனிட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி 2323

ஜி. சீ. ஈ. சாதாரணம் 1970. இரசாயனம், பௌதிகம் ஆகிய பாடங்களில் தபால் மூலம் விசேட சித்திக்காகப் போதிக்கப்படும் பிரதானமான பாகங்கள் விளக்கமாக மீட்கப்படும். A, சிற்றம்பலம், சாயி தபாற் கல்விச் சேவை, 12/1, பிளேச்சர் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 2337

## சலுசலா தலைவர் சீன பயணம்

கோட்டை, புதன்

சலுசலா ஸ்தாபனத் தலைவர் திரு. டக்லஸ் பெரேரா நேற்று சீனவுக்குப் பயணமானார்.

நாலு கோடியே 30 லட்சம் ரூபா பெறுமதியான துணிவகைகளைப் பெறுவதற்காகவே திரு. டக்லஸ் சீன சென்றுள்ளார்.

மேற்படி துணி வகைகளை கடனுக்கு இல்லாமல் பண்டமாற்று முறையிலேயே பெறப்போவதாக திரு. டக்லஸ் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தன்னைச் சந்தித்த பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

## பிரிவிடுதல் நொத்தீஸ்

**சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்**

வரணி, கரம்பைக் குறிச்சி,
முருகேசு தம்பிராசா
வழக்காளி.

இல. 3834/பி

எதிராக

1. வரணி, கரம்பைக் குறிச்சி கந்தையா முருகேசுவும்,
2. பெண் பொன்னம்மாவும்,
3. வரணி, கரம்பைக் குறிச்சி சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்,
4. கரம்பகம், தற்போது முரசுமோட்டை கோரக்கன்கட்டு, தம்பு மகள் பரமஞானம்,
5. கோரக்கன் கட்டு, சிதம்பரப்பிள்ளை கந்தையா.

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி கரைச்சிக் கோவிற்பற்று கோரக்கன்கட்டு இறை நெற் பர. 214 1/4 கொண்டதும் கிழக்கு புதிதாக வெட்டப்பட்ட வாய்க்கால், வடக்கு கொடிகாமம் கட்டை பறித்தான் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும் பீலியும், மேற்கு பீலி தெற்கு வழ காளிக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம் எனத்திக்குகள் பூண்டதும் இவ்வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் அதிகாரம் பெற்ற உலாந்தா V, சீவரத்தினத்தால் வரையப்பட்ட 1970-ம் ஆண்டு சித்திரை மாதம் 18-ந்திகதி கொண்ட 2912-ம் இலக்கப்படத்தில் 1-ம், 2-ம், 3-ம், 4-ம் துண்டுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுமான ''சிவியான் மோட்டை'' என்னும் ஆதனத்தையும் அதற்குள்ளிருக்கும் கட்டடத்தையும் கொட்டில்களையும், கிணற்றையும் அதைச் சேர்ந்தவைகளனைத்தையும் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஒரு பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி ஆதனத்தின் உரிமை கோருபவர்கள் 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந் திகதி காலை 10-00 மணிக்கு மேற்படி கோட்டில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோட்டாரின் கட்டளைப்படி
மு. முத்துக்குமாரசுவாமி
2509 சக்கடத்தார்.

## சங்கானைப் பட்டினசபை கேள்விப் பத்திர விளம்பரம்

28-10-1979-ம் திகதி காலை 10 மணி வரை கீழே சொல்லப்பட்ட வேலைகளுக்கான சீல்வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 2/50-ம். கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 25/- வீதமும் கட்டியதன் பேரில் வழங்கப்படுகின்ற கேள்விப்பத்திரங்களிலேயே கேள்விகள் கேட்கப்படவேண்டும். கேள்விப்பத்திரப் பணம் ரூபா 2/50 திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. 27-10-1970-ம் திகதி காலை 10 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விபரங்களை வேலை நேரங்களில் சங்கானைப் பட்டினசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

### வேலைகள்

1. பஸ் நிலையக் கொட்டகை திருத்தவேலைகள்,
2. பஸ் நிலைய வீதித் திருத்த வேலைகள்.

(ஒப்பம்) சி. வயிரமுத்து,
தலைவர்,
பட்டினசபை,
சங்கானை

பட்டினசபைக்காரியாலயம்,
சங்கானை, 12-10-1970
2510

## நன்றி நவிலல்

மனுவல்பிள்ளை - எனது மூத்த தமையனார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மனுவல்பிள்ளை அவர்கள் காலமானதையிட்டு, அன்னாரின் ஈமச்சடங்குகளில் நேரில் பங்குபற்றியும், அனுதாபம் தெரிவித்து தந்தி அனுப்பியும், மலர் வளையங்கள் அனுப்பியும் ஆதரவு தெரிவித்தவர்களுமான சகல உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகின்றேன்.

ம. சூ. வஸ்தியாம்பிள்ளை,
தலைவர், பட்டணசபை,
முல்லைத்தீவு.

'யோக பவனம்',
முல்லைத்தீவு,
11-10-70. 2512

அம்பன், புதன்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் கந்தபுராணபடனம் நடைபெறுகிறது.

சூரவன் மன்வதைப் படலம் வாசிக்கப்படும் நாளன்று சூரன் போர் நடைபெறும்.

## காங்கேசன்துறை பட்டினசபை கேள்விப்பத்திர விளம்பரம் 1971

மேற்படி காங்கேசன் துறைப் பட்டின சபைக்குச் சொந்தமான காங்கேசன் துறைப் பொதுசன சந்தைக்குள் இருக்கும் 1-ம், 2-ம், 3-ம் இலக்கமுடைய மாட்டிறைச்சிக் கடைகளும் 1-ம், 2-ம் ஆட்டிறைச்சிக் கடைகளும், 1-ம், 2-ம் கோழியிறைச்சிக் கடைகளும் கேள்விப்பத்திரங்கள் மூலம் 1971-ம் ஆண்டிற்கு குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

தற்பொழுது இருக்கும் மாடு, ஆடு வெட்டும்தொழுவம் மாற்றப்படின் குத்தகை எடுக்கும் நபர் தமது செலவிலேயே புதிய தொழுவத்திலிருந்து கடைகளுக்கு இறைச்சியை ஏற்றிச்செல்ல வேண்டும். மாட்டிறைச்சி பின்வரும் விலைவிகிதாசாரப்படியே விற்கப்படவேண்டும். எலும்புடன் 1 ருத்தல் விலை - ரூபா 1-20 சதம் எலும்பு தவிர்ந்து 1 ருத்தல் விலை - ரூபா 1-35 சதம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் சபையினால் அதற்கென வழங்கப்படும் நகல் பத்திரங்களில் நிரப்பப்பெற்று, இணைப்பிரதிகளாக அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் யாவும் 23-10-70-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாகச் சபை அலுவலகத்தில் ரூபா 25/- பிணைப் பணமாகச் செலுத்திப்பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி 12மணிக்கு முன்னதாகச் சீல் வைத்த காயிதக் கூவையில், இடதுபக்கத்தில் விண்ணப்பிக்கும் கடையின் பெயரைக் குறிப்பிட்டு, தலைவர், பட்டினசபை, காங்கேசன்துறை என்ற விலாசத்திற்கு விலாசமிடப்பட்டு சபையில் வைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் பெட்டியிலோ, அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ சபை அலுவலகத்தில் சேரும் வண்ணம் அனுப்பப்படல்வேண்டும்.

எந்த ஒரு விண்ணப்பத்தினையோ, அன்றேல் எல்லா விண்ணப்பங்களையுமோ எக்காரணமுமின்றி நிராகரிக்கவோ அன்றேல் ஏற்றுக்கொள்ளவோ சபைக்கு உரிமையுண்டு.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்,
[illegible]
தலைவர்,
பட்டினசபை,

கூடைப்பந்தாட்டத்தில்

## திருமலை கோஷ்டியிடம் பற்றிக்ஸ் தோல்வி!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரியின் கூடைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில், சினேகபூர்வமாக நடைபெற்றகூடைப் பந்தாட்டப் போட்டியில், திருமலை சென். ஜோசப் கடைசி நிமிடத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் திருமலைக் கோஷ்டியினரின் விளையாட்டு ரசிகர்கள் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேற்றமடைந்திருந்தது. இவர்களே அதிகப் புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தார்கள். திருமலைக் கோஷ்டியினர் இடைவேளையின் போது 26-10 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின் ஆட்டம் பார்ப்பதற்கு மிகச் சிறப்பாகவும் கடும் போட்டியாகவும் இருந்தது. சென் பற்றிக்ஸ் கோஷ்டியினர் மிக வேகமாக புள்ளிகளைக் கடைசி நிமிடத்தில் அடுத்தடுத்து பெற்ற வண்ணம் இருந்தனர். அதே வேளையில் சென். ஜோசப் கோஷ்டியின் வீரர்களும் புள்ளிகளை மிக நிதானமாகவே சேகரித்தார்கள்.

ஆட்ட முடிவில் திருமலை சென். ஜோசப் கல்லூரிக் கோஷ்டியினர் 40—38 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றனர்.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது. (தே. நி)

அனலைதீவு மகாவித்தியாலயம்:

## வாணிவிழாப் போட்டி முடிவுகள்

அனலைதீவு புதன்

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் வாணிவிழா சிறப்புறநடைபெற்றது. விழாவையொட்டி மாணவர்களிடையே பேச்சு கட்டுரை, இசைப் போட்டிகள் நடைபெற்றன. போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை கொழும்பு அனலைதீவு வாலிப இயக்கத்தினர் வருடாவருடம்போல் இம்முறையும் வழங்கினர். பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:-

### கட்டுரைப் போட்டி

மேற்பிரிவு ஆண்கள்;-
சு தணிகாசலம், சி குலசிங்கம், வை சண்முகநாதன்.

மேற்பிரிவு பெண்கள்:
ச அம்பிகாமலர், பொ நிர்மலாதேவி, மு வசந்தாதேவி

மத்திய பிரிவு ஆண்- பெண்:
க இந்திரன், ச மனோன்மணி, ச பத்மநாதன்.

கீழ்ப்பிரிவு ஆண்கள்:
ப ரவீந்திரன், சு தயாபரராசா, ஆ பஞ்சலிங்கம்

கீழ்ப்பிரிவு பெண்கள்:
க கோகிலாம்பாள், கோ திருமகள், சா லலிதாம்பாள்

### பேச்சுப்போட்டி

மேற்பிரிவு ஆண்கள்:
இ நடராசா, சி சபாரெட்ணம், சி குலசிங்கம்

மேற்பிரிவு பெண்கள்:
ஆ தவமணி, செ கௌசல, மு வசந்தாதேவி

மத்தியபிரிவு ஆண்-பெண்
தி திலகவதி, ச பத்மநாதன், மு சிவபாக்கியம்.

கீழ்ப்பிரிவு ஆண்கள்:
சு தயாபரராசா, ப ரவீந்திரன், நா அம்பிகாவதி

கீழ்ப்பிரிவு பெணகள்:
சா லலிதாம்பாள், ச சாரதாம்பாள், க கோகிலாம்பாள்.

### இசைப்போட்டி

மேற்பிரிவு ஆண்கள்:
ச க சுந்தரலிங்கம், சு வெற்றிவேல், மீ இரசரெட்ணம்.

மேற்பிரிவு பெண்கள்:
சா தெய்வபுஷ்பம், சி கமலாதேவி, ந பெரியநாயகி,

மத்தியபிரிவு ஆண்-பெண்
பே இராசநாயகம், நா சந்திரசேகரன், ச மனோன்மணி.

கீழ்ப்பிரிவு ஆண்கள்:-
ப குணம், த தனபாலரெட்ணம், ச பரமஞானம்,

கீழ்ப்பிரிவு பெண்கள்:
சா லலிதாம்பாள், க வசந்தாதேவி, கு சொர்ணபூபதி.

## மன்னாரில் விவசாயப் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணத்தில்

## ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் பிரிவில் 1-0 கோலால் வெற்றி பெற்றது இப்போட்டிக்கு திரு ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

மேற்படி இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற ஆட்டம் சரிசமனாக முடிவடைந்தது. இப்போட்டிக்கு திரு. இம்மனுவேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே. நி)


**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
முத்துராமன்-காஞ்சனா
நடித்த
**காதலிக்க நேரமில்லை**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி-பத்மினி
நடித்த
**செந்தாமரை**

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 &9-45 p m
Guiliano Gemma
in
FORT YUMA GOLD
(Scope color)


கோட்டை. புதன்

சாதகமற்ற காலநிலைகாரணமாக தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலுள்ள கப்பல் போக்குவரத்து இம்மாதம் 30-ந் திகதியிலிருந்து அடுத்தாண்டு ஜனவரி 3-ம் திகதி வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இக்கப்பற்சேவை திரும்பவும் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ந்திகதி ஆரம்பமாகும்.

## உதைபந்தாட்டப் போட்டிகள்

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை மகாஜனா- வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவில் மகாஜனா வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடந்த போட்டியில் 1-ம் பிரிவுகளின் போட்டியில் 2-1 கோல் மகாஜனாவும் 2-ம் பிரிவு கோஷ்டிகளின் போட்டியில் 1—0 கோலால் வட்டுக்கோட்டையும் வெற்றிபெற்றன திரு. எஸ். தனபாலசிங்கம் நடுவராக கடமையாற்றினார்.

## சிதம்பராவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்க ஆதரவில், யாழ் விளையாட்டரங்கில் வல்வை சிதம்பராக் கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வல்வை சிதம்பரா 8-0 கோல்களால்பெரும் வெற்றியீட்டியது. முன்அரை நேரத்தில் 4 கோல்களும், பின் அரை நேரத்தில் 4 கோல்களும் போட்டனர்.


**REGAL**
Jaffna
Daily 4-45, 7&9-45p.m.
Poya days 4 Shows
THE NAKED WORLD

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—நிர்மலா
ஜி. வரலக்ஷ்மி — நாகேஷ்
நடித்த
**உயிரா மானமா**

இன்று மட்டும்
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி துணி வகைகளை கடனுக்கு இல்லாமல் பண்ட மாற்று முறையிலேயே பெறப்போவதாக திரு. டக்லஸ் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தன்னைச் சந்தித்த பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்

கோட்டில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கோட்டாரின் கட்டளைப்படி
மு. முத்துக்குமாரசுவாமி
2509 சக்கடத்தார்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் கந்த புராணபடனம் நடைபெறுகிறது.

சூரவன் மன் வதைப் படலம் வாசிக்கப்படும் நாளன்று சூரன் போர் நடைபெறும்.

தேவைப்படின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்,
க. ஜெயபாலசிங்கம்,
தலைவர்,
பட்டினசபை,
காங்கேசன்துறை.
பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன்துறை,
12-10-1970- 2511

## 75 மாணவருக்கு ஓர் ஆசிரியர்

நல்லூர், புதன்

75 மாணவர்கள் கல்வி பயிலும் சிறுப்பிட்டி மேற்கு அரசினர் பாடசாலையில் ஒரே ஒரு ஆசிரியர்மட்டுமே கடந்த பல மாதங்களாகக் கடமையாற்றி வருவதாகவும், கடந்த வருட முற்பகுதியில் இங்கிருந்து இடமாற்றஞ்செய்யப்பட்ட 2 ஆசிரியர்களுக்குப் பதிலாக எவரையும் கல்வி இலாகா நியமிக்கவில்லை என்றும் மேற்படி பாடசாலை பெற்றூர்-ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. சி. வயித்தி கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

மாணவர்களின் அவல நிலையைப் போக்கும்படி அவர் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்பிரிவு ஆண்கள்:
இ நடராசா, சி சபாரெட்ணம், சி குலசிங்கம்

சாலலிதாம்பாள், க வசந்தாதேவி, கு சொர்ணபூபதி.

## மன்னூரில் விவசாயப் பயிற்சி நிலையம்

முசலி, புதன்

'பண்டைக்காலத்தில் மன்னூர் மாவட்டம் நெற்களஞ்சியத்தில் புகழ்பெற்றுவளங்கியதென்பதை நாம் வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. இன்றுமன்னூர் மாவட்டத்தில் சில பகுதிகளில் நெல்விளைச்சலும், உப உற்பத்திப் பெருக்கமும், எதிர்பார்த்த அளவு விருத்தியடையாமைக்கு விவசாயத்தில் முன்னணியில் நிற்கும் நாடுகள் பின்பற்றும் நவீன விவசாய முறைகளையும், விவசாய இரசாயன முறைகளையும் நாம் சரியானமுறையில் பின்பற்றாமல் இருப்பதே காரணமாகும்.'

இவ்வாறு மன்னூர் மாவட்டத்தைச்சேர்ந்த உயிலங்குளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விவசாய பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்த மன்னூர் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஜனுப் எம் சி. எம். முஸ்தபா கூறினூர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- 'இக்குறைகளைநிவர்த்தி செய்யவும் எமது மாவட்டத்தில் வாழும் விவசாயிகளுக்கும், மாதர், இளைஞர் விவசாய கழகங்களுக்கும், விவசாய இலாகாவில் கடமையாற்றும் விவசாய ஊழியர்களுக்கும் சரியான முறையில் பயிற்சி அளிப்பதற்காகவுமே இந்த பயிற்சி நிலையம் மன்னூர் மாவட்டத்தில் முதல்முதலாக ஆரம்பித்திருக்கின்றது. இந்த பயிற்சிநிலையம்எமதுஇலாகா எதிர் பார்த்ததைப்போல், மன்னூர் வாழ்விவசாயிகளுக்கும் மாதர், இளைஞர் விவசாய கழகங்களுக்கும் தகுந்த முறையில் பயன்பட உதவும் என்று எதிர்பார்க்கின்றேன்' என்றுகூறினூர்.

இதில் 34 விவசாய விஸ்தரிப்பு சேவையாளரும்10விவசாய போதனுசிரியர்களும் பங்குபற்றினூர்கள்.


## அனுதாபம்

காலி, புதன்

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி அப்துல் நாஸரின் மறைவு குறித்து காலி மாநகரசபை ஏகமனதாக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியது


# சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

# பொலிடோல் ஈ-605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அசுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்துவிடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது— பொலிடோல்.

100 சி. சி. (4 அவுன்ஸ்) விலை— ரூ. 5/50
250 சி. சி. (9 அவுன்ஸ்) விலை— ரூ. 11/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை— ரூ. 37/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.**



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P.9983



# தீபாவளி விற்பனை!

உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் உகந்த

★ கைத்தறி செக்கா ★ பிறின்ரட் நைலக்ஸ்
★ சிலோன் மணிப்புரி ★ பிலோன் நைலக்ஸ்
★ பிளேன் வோயில் ★ பிறின்ரட் வோயில்
★ ஜொயின்ட் நைலக்ஸ் ★ றெடிமேட் புளவ்ஸ்

சேட்டிங் — சூட்டிங் — சன்சூட்ஸ்

மற்றும்

சகலவிதமான ஜவுளி வகைகளும் கண்கவர் வண்ணக் கலர்களில் எமது கைவசமுண்டு.

உங்களின் தீபாவளித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

# சீப்சைட்

(வட இலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)

186-188, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்.
(போன்: 479)



இன்று மட்டும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த

# ஒரு விரல் (ஒரு மர்ம சித்திரம்)

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன் — காஞ்சனு
நடித்த

# சாந்தி நிலையம்

7-வது வாரம்

**வெலிங்டன்** யாழ்நகர்

(2-30, 6-30, 9-30) போயாதினங்களில் 4 காட்சிகள்

கிங்ஸ்லி (கொழும்பு)

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.

உணர்ச்சி ஓவியம் . . .

★ ஏ வி.எம்.ராஜன்

இந்திய ஜனுதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனு, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த

ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)

டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்

★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்

# உயர்ந்த மனிதன்

[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காஸிய அமைதி முயற்சி

# துரித நடவடிக்கையில் இறங்க வல்லரசுப் பிரதிநிதிகள் முடிவு

## 15 நாட்களில் மீண்டும் கூடுவர்

நியூயோர்க் அக்.14

மேற்காசிய அமைதிக்கான முயற்சிகளை துரிதப் படுத்துவதென்று நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் முடிவு செய்திருக்கிறார்கள்,

அமெரிக்கா சோவியத்யூனியன் பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஐ. நா சனப்பிரதிநிதிகள் நேற்றுக் கூடி பேசியபின் விடுத்த ஓர் அறிக்கையில் இதனைத் தெரிவித்திருக்கிறார்கள். 1967-ம் ஆண்டு பந்தோபஸ்து சபை மேற்காஸியா குறித்து நிறைவேற்றிய தீர்மானம் முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றும் இஸ்ரேலியர் கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேற வேண்டுமென்றும் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் நிலைநாட்டப்பட வேண்டுமென்று அறிக்கையில் நான்கு வல்லரசுப் பிரதிநிதிகள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இன்னும் 15 நாட்களில் மீண்டும் சந்தித்துப் பேசுவதென்றும் அவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

ஐ. நா, மகாசபையின் 25-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக உலக நாடுகள் பலவற்றின் தலைவர்களும் அமைச்சர்களும் நியுயோர்க் வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு அபா இபான் நேற்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு வில்லியம்ரோஜர்சைச்சந்தித்துப்பேசினார். இந்தச் சந்திப்பிற்குப்பிறகுபத்திரிகை நிருபர்களுடன் பேசிய திரு இபான் ஐக்கிய அரபுக் குடியரசு வெளிநாட்டமைச்சர் திரு றியாட்டை ஐ. நா. சபையில் சந்திக்கத் தாம் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தார். ஆனால் சூயஸ் கால்வாய்ப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள ஏவா யுதத் தளங்கள் அப்புறப்படுத்தப்படும் வரையில் அமைதிப் பேச்சுக்களில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லையென்று திரு இபான் கூறினார்.

### அரபுப் பிரதிநிதிகள் புகார்

ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவந்துள்ள அரபு நாடுகளின் பிரதிநிதிகள் தாங்கள் பயமுறுத்தப்பட்டு வருவதாக ஐ நா. மகாசபைத் தலைவருக்குப் புகார் செய்துள்ளனர் கடந்தசில தினங்களாகவே தங்களுக்கு பயமுறுத்தல் கடிதங்களும் டெலிபோன்களும் வந்து கொண்டேயிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

— —

### முதலாவது இடம்

யாழ்ப்பாணம், வியா

தொழில் இலாகாவின் தமிழ் விழாவில், கவிதைப் போட்டியில் கல்வயலைச் சேர்ந்த கவிஞர் வே. குமாரசுவாமி முதலாவது இடத்தைப் பெற்று, தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

கடந்த வருடம் உள்நாட்டு இறைவரி திணைக்களம் நடத்திய கவிதைப் போட்டியிலும் இவர் முதலாவது இடத்தைப் பெற்றார்.

— —

### மாணவருக்கு 1000 ரூபா கடனுதவி

கொழும்பு, புதன்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மக்கள் வங்கி மூலம் ரூபா 1000 கடனுதவி வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. வருமான வரி செலுத்தாத பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் மேற்படிப்புக்காக கடனுதவி பெற விண்ணப்பிக்கலாம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

— —

### தற்கொலை

இமையாணன், புதன்

வல்வெட்டித்துறை கொம்மாந்தறை என்னுமிடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளையின் மனைவி ஆறுத்தைப்பிள்ளை வயது 50 நோய் காரணமாக நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

நான்கு வருடகாலமாக இவர் நோயினால் அவஸ்தைப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது. மரண வி[சார]ணை அதிகாரி திரு. சி. தாமோதரம்பிள்ளை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# இறந்தவரின் உடலில் 3 கோடரி வெட்டுக் காயம்

## மல்லாவி வழக்கில் டாக்டர் சாட்சியம்

மட்டுவில், புதன்

''இறந்தவரின் உடலில் மூன்று கோடரிக் கொத்துக் காயங்களும், ஒருகத்திவெட்டுக்காயமும் இருந்தன. இந்தக் கோடரிக் கொத்துக் காயம் ஒன்றே ஒருவரை இறக்கச்செய்வதற்கு போதுமானது. இதைவிட ஏனைய கோடரிக் கொத்துக்காயங்களும் கத்திக் காயமும் மதியாபரணத்தின் மரணத்துக்குக்காரணமாகியுள்ளன.

மல்லாவி கொலைவழக்கு விசாரணையின்போது கிளிநொச்சி சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஞானசேகரம் தனது சாட்சியத்தின்போது மேற்கண்டவாறு கூறினார்.

இந்தவழக்கில் மல்லாவியைச்சேர்ந்த 8பிள்ளைகளின் தந்தையான மதியாபரணம் என்ற 47 வயது தொழிலாளியை, நித்திரையில் வைத்து கோடரியால் வெட்டிக் கொலைசெய்ததாக, அவரின் மனைவி(37வயது)சிதம்பரத்தின்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. சாவகச்சேரிமாஜிஸ்திரேட்திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணை நடைபெற்றது

இந்தவழக்கையும எதிரியான பெண்ணையும் பார்க்க ஏராளமான மக்கள் நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர் சட்ட வைத்திய அதிகாரி தொடர்ந்து இறந்தவரின் காயங்கள் பற்றி விபரித்தார். கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரி கந்தையா சந்தேகநபரான பெண்ணின் சேலையில் பட்டிருந்த இரத்தக்கறையையும், கோடரி, கத்தி ஆகியவற்றில் உள்ள இரத்தக் கறையையும் இரசாயன பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கும்படி மாஜிஸ்திரேட்டிடம் கோரினார்.

இக்கட்டத்தில் மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம்மாதம் 23-ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

தெ. ஆபிரிக்காவுக்கு ஆயுதவிற்பனை தடை:

# ஐ. நா பொதுச்சபையும் தீர்மானத்தை ஏற்றது

நியுயோர்க், அக். 14

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதை முழுமையாக நிறுத்திவிடும்படி அங்கத்துவநாடுகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஐ. நா. மகா சபைக் கூட்டத்திலும் பெரும்பான்மை வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இம்மாதிரியான ஒரு தீர்மானம் ஏற்கனவே ஐ. நா. மகாசபை அரசியல் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டது.

நேற்று மகா சபையில் நிறைவேறிய தீர்மானத்தை 98 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன. தென்னாபிரிக்காவும் போர்த்துகல்லும் எதிர்த்து வாக்களித்தன, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவையும் வேறு ஆறு நாடுகளும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதைத்தடைசெய்து ஐ. நா. பாதுகாப்பு சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை செயல்படுத்தும்படி அங்கத்துவநாடுகளை மகாசபை நிறைவேற்றிய தீர்மானம் வற்புறுத்துகின்றது. இத்தீர்மானம் எங்ஙனம் செயல் படுத்தப்படுகின்றது என்பதுபற்றி ஆராய்ந்து டிசம்பர் மாதம் வாக்கில் சபைக்கு அறிவிக்கும்படி தலைமைச் செயலாளர் யுதாண்ட் கேட்கப்பட்டுள்ளார்.

### பிஜி அனுமதி

ஐ. நா. சபையில் பிஜித் தீவுகள் நேற்று 127-வது நாடாகா ஏற்றுக்கொள்ளப்பட்டது

96 ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பிஜித்தீவுகளின் பிரதிநிதிகள் தூதுக்குழுவினர் நேற்று இதரநாடுகளின் ஆரவார வரவேற்புகளுக்கிடையில் மகாசபையில் தமக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர்.

### கழிவு எண்ணெயை அகற்ற நடவடிக்கை

நல்லூர். புதன்

கோண்டாவில் இ. போ. ச. டிப்போவில் தேங்கிக் கிடக்கும் கழிவு எண்ணெ அருகாமையில் இருக்கும்றோட்டைக் கடந்த செல்கின்றது. இதனால் போக்குவரத்து வாகனங்களுக்கும் நடைபாதையில் செல்பவர்கட்கும் மிகவும் ஆபத்தான நிலையை உருவாக்கக் கூடிய இருப்பதுடன் அருகாமையில் குடியிருப்பவர்கட்கும் சுவாத்தியத்திற்கு உகந்ததல்ல என்று கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை இ. போ. ச. முகாமையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

அதன் பிரகாரம்இ போ. ச. பொது முகாமையாளர் அவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் உங்கள் கடிதத்தின் சார்பாக மேற்படி விடயத்திற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துள்ளேன். தேங்கிக் கிடக்கும் கழிவு எண்ணையை குடியிருப்பவர்கட்கு சுவாத்தியத்திற்கு பங்கம் விளைவிக்காத முறையிலும் போக்குவரத்திற்கு இடையூறு விளையாமலும் ஒழுங்குகள் செய்துள்ளேம் என்று குறிப்பிட்டுள்ளார்,

— —

### இவரை மோதிய கார் எங்கே?

நல்லூர், புதன்

மூன்று சக்கரவண்டியில் வீதியால் சென்று கொண்டிருந்த அங்கவீனர்ஒருவரை மோதிவிட்டு மறைந்த கார் ஒன்றைப் பொலிசார் தேடி வருகின்றனர். நடராசா என்பவரையும் அவரது மூன்று சக்கர வண்டியையும் மோதிவிட்டு மறைந்த காரின் இலக்கம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விபத்துக்குள்ளானவர் கோப்பாய் எம். பியிடம் புகார் தெரிவித்திருக்கிறார்.

— —

### மாணவ தாதிகள்

# கனடா-கம்.சீனா ராஜீய உறவு

## அமெரிக்கா கவலை

நியுயோர்க், அக். 14

கனடாவும் கம்யூனிஸ்ட் சீனாவும் ராஜீய உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதென்று செய்துள்ள முடிவு அமெரிக்காவுக்கு கவலையளித்துள்ளது,

பார்மோசாவின்சர்வதேச அந்தஸ்தை இது பெரிதும் பாதிக்கக்கூடும் என்று கருதப்படுவதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

கனடாவும் செஞ்சீனாவும் ராஜீய உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதென்று இணங்கியிருப்பதெனபது பற்றிய செய்தி ஒட்டாவிலும்பீகிங்கிலும்ஏககாலத்தில்அறிவிக்கப்பட்டது. சீன மக்களின் ஒரே அரசாங்கமாக பீகிங்கை கனடா அங்கீகரித்திருக்கிறது. இந்த அறிவித்தல் வெளிவந்த அதே சமயம் கனடாவுடனான தனது உறவுகளை துண்டித்துக் கொள்வதாக தேசிய சீனா அறிவித்துள்ளது.

ஒட்டாவாவிலுள்ளதேசிய சீன தூதுவர் தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறார்.

மக்கள் சீனக் குடியரசுக்கும் கனடாவுக்குமிடையில் இன்னும் ஆறுமாத காலத்தில் தூதுவர் பரிமாற்றம் செய்து கொள்ளப்படவிருக்கின்றது.

# மின்சார விநியோகம் தடை பற்றி கி.ச. தலைவர் அறிக்கை

நல்லூர், புதன்

''எமது கிராமசபை[...]ட் ...

சபைக்குமட்டும் உரியதல்ல. பருத்தித்துறை, சாவகச் சேரி, ...

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 15—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை கானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொலாளர் கேட்டவை, 1-00 திரை கானம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

6-15 இசைப்பயிற்சி 7-00 வாத்திய இசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச் சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

### இன்றைய பலன்

புரட்டாதிமாதம்29-ந்திகதி

(15-10-70)

மேஷம்- அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக் கொள்ளலாம். அமைதி நன்று

ரிஷபம்- குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம் பெறும். வெளியிடத்தில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம்.

மிதுனம்- உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். வைத்தியவழிகளில் பணம் செலவாகும். ஒய்வு விரும்பத்தக்கது.

கடகம் அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களில் [...]ணிப் புகழ் பரவும். கல்விப்பணி செல்வாக்கை வளர்க்கும்.

சிம்மம்- உள்ளம் உவகையால் துள்ளும் உறவுமுறைகளில் இறுக்கமேற்படும். அறவழியில் நாட்டமுண்டு.

கன்னி-வாகனம்செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரி டாக்டர் ஞானசேகரம் தனது சாட்சியத்தின்போது மேற்கண்டவாறு கூறினர்.

றத்தில் குழுமியிருந்தனர் சட்ட வைத்திய அதிகாரி

இம்மாதம் 23-ந் திகதி வரை ஒத்திவைத்தார்.

தாமோதரம்பிள்ளை தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.




# பின்கோ
## என்றைக்கும் ஏற்றது

முத்துப் போன்ற பிளாஸ்ரிக் வண்ணங்கள் உலகிலே மலர்ந்துவிட்டன. கனமே இல்லை எனப்படத்தக்கவை. வளைக்கலாம், முறுக்கலாம், நீட்டலாம், அவற்றின்மீது குதித்தும் பார்க்கலாம். அவை, திமிறிக்கொண்டு முன் இருந்தபடி நிறைவான ஒரே வார்ப்பு அச்சுருவமாக வந்துவிடுகின்றன. அவை, சறுக்காதவை, நச்சுத்தன்மை அற்றவை. உண்மையில், அழிக்க முடியாதவை. மிகவும் சிக்கனமானவை.

BINCO




AJNS 934/70

விநியோகத்தர்கள்:- ஜே.எல். மொறிசன் சன்ஸ் அன்ட் ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்டெட்


# மின்சார விநியோகம் தடை பற்றி கி.ச. தலைவர் அறிக்கை

நல்லூர், புதன்

"எமது கிராமசபைப் பட்ட மின்சார பாவனை மக்களே உங்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் மின்சாரத்தை மட்டும் பாவியுங்கள். அடுத்த வருடம் ஜனவரிமாதம் வரைக்கும் உங்கள் சிரமத்தைப் பாராது மின்சாரத்தை சிக்கனமாக பாவியுங்கள்."

இவ்வாறு கோப்பாய் கிராமசபைத் தலைவர் கோப்பாய் தொகுதி மின்சார பாவனை மக்களை கேட்டுள்ளார். அவர் தனது சுற்றுநிருபத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவையான மின்சக்தியை கொடுக்கமுடியாது மின்சாரக் கூட்டுத்தாபனத்தார் மிகமிக கஷ்டமுறுகின்றனர். அவர்களால் சுன்னுகத்தில் நிறுவம்பட்டுள்ள மின்சக்தி இயந்திரங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சகல தலதாபனங்கட்கும் போதிய மின்சக்தியை வழங்க சக்தியற்றதாய் இருக்கின்றன.

மேற்படி மின்சக்திக் குறையை நிவர்த்திசெய்யும் நோக்கமாக மன்கெலியா என்னுமிடத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எப்போதும் எந்த நேரமும் மின்தடையின்றி சக்தி வழங்கக் கூடிய திட்டம்செயற்பட்டுவந்து முடியும் தறுவாயில் உள்ளது. இச்சேவை மிக அண்மையில் இப்பகுதிக்குக் கிடைக்கவுள்ளது.

எனவே பாவனையாளர்கள் தங்கள் அன்றாடம் தேவையான மின்சக்தியை மட்டுப்படுத்திப் பாவிப்பார்களேயானல் இப்படியான மின்சாரத் தடையை நிவர்த்திசெய்யலாம்.

இந்த மின்சக்தித் தடை எம் கோப்பாய்க் கிராம சபைக்குமட்டும் உரியதல்ல. பருத்தித்துறை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை ஊரெழு, கைதடி, நாவற்குளி, நெல்லியடி, அச்சுவேலி, உடுவில், மானிப்பாய் ஆகிய இடங்களும் அடங்கியுள்ளன வென்பதை அறியத்தந்து உங்கள் பாவனைகளை மட்டுப்படுத்தி 31-12-70 வரை பாவிக்குமாறு தயவாக வேண்டிக் கொள்ளுகிறேன்.

## கட்டுப்பாடு நீங்கும்

கோட்டை, புதன்

கடந்த சில மாதங்களாக நாட்டில் கருவாட்டுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவியது. இத் தட்டுப்பாடு ஒரு சிலதினங்களில் நீங்கும் என கூட்டுறவு மொத்த விற்பனை இலாகாவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இக் கருவாட்டுத் தட்டுப்பாட்டை நீக்க 1000 தொன் கருவாட்டை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இறக்குமதிசெய்துள்ளது. இன்னும் ஓரிரு தினங்களில் இதை நாட்டில் உள்ள கூட்டுறவுமொத்த விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கவுள்ளது.

## கும்பாபிஷேகம் ஒத்திவைப்பு

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு வல்லன் திருப்பெருந்துறை ஸ்ரீ நாகதம்பிரான் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் வருகிற வருடம் தை மாதம் 18-ம் திகதி நடைபெறுமென்றும் இம்மாதம் 19-ம் திகதி நடைபெறவிருந்த கும்பாபிஷேகம் திருப்பணி, விக்கிரக வேலைகள் முற்றுப்பெறுதிருப்பதால் ஒத்திப்போட்டுள்ளதாகவும் பரிபாலன சபைக்காரியதரிசி திரு. க. ஐயாத்துரை தெரிவித்தார்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விபத்துக்குள்ளானவர் கோப்பாய் எம். பியிடம் புகார் தெரிவித்திருக்கிறார்.

## மாணவ தாதிகள் நேர்முகப் பரீட்சை

அம்பன் புதன்

இவ்வாண்டு முற்பகுதியில் நடைபெற்ற மாணவதாதிகள் பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளுக்கு அவ்வப் பகுதி சுகாதார சேவை அத்தியட்சகர் கந்தோரில் நேர்முகப் பரீட்சை நடைபெற விருக்கின்றது.

யாழ். மாட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 15-ந் திகதி யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகர் கந்தோரிலும் வவுனியா மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் பிரிவிற்கு தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு 16-ந்திகதி வவுனியா சுகாதார சேவை அத்தியட்சகர் கந்தோரிலும்நேர்முகப் பரீட்சை நடைபெறும். இதற்கான அனுமதிச் சீட்டுகளை சுகாதார சேவை அத்தியட்சகர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

செல்வாக்கை வளர்க்கும்.

சிம்மம்- உள்ளம் உவகையால் துள்ளும் உறவுமுறைகளில் இறுக்கமேற்படும். அறவழியில் நாட்டமுண்டு.

கன்னி-வாகனம்செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். தனிவழிப்பயணத்தைத் தவிர்க்கவும். மௌனம் சாதிக்கவும்.

துலாம்- காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்பு போல் வாழ்க்கை இனிக்கும். கவர்ச்சிகரமான தினம்.

விருட்சிகம்- எதிர்பாராத பணமுடைஏற்படும் கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள். அமைதி நன்று.

தனுசு- ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும்.

மகரம்- தொழில்பகுதியில் புதிய வாய்ப்புக்கள் கிடைக்கலாம். எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைக்கும்.

கும்பம்- சிலர் வாழ்க்கையில் திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. அதிர்ஷ்டகரமான தினம்

மீனம்- பலவித சிந்தனைகளால் தாக்கப்படுவீர்கள். உடல்நலனும் சிறிது பாதிககப்படலாம். எதிலும் கவனம் செலுத்தவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


# தீபாவளி மலிவு விற்பனை

ஆரம்பம்: 10—10—1970

உங்கள் பண்டிகைக்கேற்ற ஜவுளித் தினுசுகளையும் சேலைவகைகளையும் ஏனைய சூட்டிங், சேட்டிங், சேட்டுவகைகளையும் மிகவும் மலிவான விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

தின்னவேலி சுத்தப்பட்டுச் சாறி ரூபா 215/- தொடக்கம் 265/- வரை
நைலெக்ஸ் பிறின்டெட் சாறி ரூபா 45/- தொடக்கம் 67/- வரை
"சீமா" மணிபுரி சாறி ரூபா 35/- தொடக்கம் 155/- வரை
"சீமா" டெட்ரோன் சாறி வ. வி. ரூபா 42/50 ம. வி. 37/50
"சீமா" நைலோன் சாறி வ. வி. ரூபா 41/50 ம. வி. 36/50

# சாறி எம்போறியம்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்: "சீமா சாறீஸ்"

124, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 418


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமது நடவடிக்கைகள் யாவும் சத்தியத்தை மையமாகக் கொண்டிருக்கவேண்டும். நமது முன்னேற்றத்தில் நாம் இந்த நிலைமையை அடைந்துவிட்டால், ஒழுங்கான வாழ்க்கையின் மற்ற விதிகளை அனுசரிப்பது இயல்பான காரியமாகிவிடும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna; Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 29-ந் திகதி (15-10-70)


## ஆசிரியர் நிலை

அகில இலங்கை ஆசிரிய சங்கம் தனது ஐம்பதாவது ஆண்டுப் பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறது. கடந்த ஐம்பதாண்டு காலத்திலும் சங்கம் ஆற்றிய பணிகளையிட்டு அது பெருமைகொள்ள இடமிருக்கிறது. ஆசிரியர்களின் நிலைமைமுன்னர்இருந்ததைவிட இப்போது முன்னேற்றமடைந்துள்ளதென்பது உண்மையே. இதில் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு நிறையப் பங்கிருக்கிறதென்பதும் உண்மைதான் ஆனாலும் நாட்டின் கல்வித்தரம் முன்னர் இருந்ததைவிட இப்போது குறைந்திருக்கிறதென்ற பொதுவான கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாட்டின் கல்வித்தரம் உயரவும் நாளைய சந்ததியினரான இன்றைய மாணவர்களைக் கொண்டே நாட்டின் வருங்காலம் கணிக்கப்படுகிறதென்பதையும் உணர்ந்து நற்பிரஜைகளை உருவாக்கவும் கல்வித்தரத்தை உயர்த்தவும் இந்தச் சங்கம் தகுந்த ஆலோசனைக் கூறி அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் அடுத்த ஐம்பது வருடகாலத்தில் இந்தப் பணியைச் சிறப்புறச் செய்து நூற்றாண்டுவிழாவை மிகப்பெருமையுடன் கொண்டாடக்கூடிய நிலையை ஏற்படுத்துமென்று எதிர்பார்ப்போம்.

நாடு விடுதலை பெற்று இருபத்திரெண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்படுகிறது. ஆயினும் ஆசிரியர்களிடையே இன்னும் பாகுபாடு காட்டப்பட்டுத்தான் வருகிறது. நாட்டுக்கேற்ற கல்வித்திட்டத்தைக் கொண்டுவருகிறோம் என்று ஆட்சிபீடத்திலேறிய அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் சொல்லிவந்திருக்கின்றன. கல்வி அமைச்சின் பொறுப்பை ஏற்கும் ஒவ்வொரு அமைச்சரும் இதைக்... யிடியும் ஏற்பட்டிருக்காது. இதேசமயம் ஆசிரியர்கள் பல்பல சங்கங்களாகப் பிரிந்திருக்கும்போது அவர்களின் ஆலோசனைகளைப் பெறுவது சுலபமல்லவென்று சொல்வதற்கும் இடமுண்டு என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் ஒன்றுசேர்ந்து ஒரேசங்கமாக ஒரே குரலில் தங்கள் குறைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் தங்கள் சமூகத்தின் மேம்பாட்டுக்கு வழிவகுப்பதுடன் மாணவ சமுதாயத்துக்கும் நல்லவழிகாட்ட முடியும்.

அகில இலங்கை ஆசிரியர் சங்கப் பொன்விழாவில் கலந்துகொண்டு பேசிய கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத், ஆசிரியர்கள் மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தக்கூடாதென்றும் அரசியல் விஷயங்களை பாடசாலைகளுக்கு வெளியிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அரசியல் உரிமைகளை துஷ்பிரயோகம் செய்யும் ஆசிரியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரித்திருக்கிறார்.

ஆசிரிய நியமனம், இடமாற்றம் என்ற பெயரில் ஆசிரியர்களை அரசியல்வாதிகள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்; ஆசிரியர்களும் அரசியல்வாதிகளை பயன்படுத்தி வந்திருக்கின்றனர். மாணவர்களைப் பொறுத்தவரையில் சில சமயங்களில் அவர்களே ஆசிரியர்களையும் அரசியல் சேற்றில் சிக்க வைப்பதுண்டு. ஜனநாயகம் செய்துள்ள 'சேவை'யில் கட்சி அரசியல்முறை கணவனையும் மனைவியையும், தந்தையையும் மைந்தனையும் வேறுபடுத்தச் செய்திருக்கிறதென்றால் மாணவர்களை விட்டுவைக்கவா போகிறது.

ஆனாலும் அமைச்சர் கூறியுள்ளதுபோல் கட்சி அரசியல் விவகாரங்களை ஆசிரியர்கள் பாடசாலை...

# 'வடக்கில் சுதந்திரக்கட்சி வளர்ச்சியை யாராலும் முறியடிக்க முடியாது'

## கூட்டுக்கமிட்டி கூட்டத்தில் துரைராசா

யாழ்ப்பாணம், வியா வடபகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வளர்வதற்கு எதிர்ப்புநடவடிக்கை எடுப்பவர்கள் பலர். இதை யாராலும் முறியடிக்க முடியாது. ஏனெனில் தீவிரமான முறையில் சுதந்திரக்கட்சி வடக்கில் வளர்ந்து கொண்டிருக்கிறது.'

இவ்வாறு வடபிரதேச சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு எம். துரைராசா வடபிரதேச ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்,

வடபிரதேச சுதந்திரக் கட்சி மாவட்டத் தலைவர் திரு எம் நடராசா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் வடபிரதேச சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு துரைராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

தொழில் பெறுவதற்காகத்தான் சுதந்திரக் கட்சியில் பலர் அங்கத்தவர்களாகச் சேர்கிறார்களென்றும் கிளைகளை ஆரம்பிக்கிறார்களென்றும் சிலர் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இது அபத்தமானது. தேசிய ஒற்றுமையை மனதில் வைத்து நாட்டின் முன்னேற்றத்துக்காக கிளைகள் ஆரம்பிக்கப் படுகின்றன, அங்கத்தவர்களாகச் சேர்கிறார்கள், நியாயமான முறையில் தொழில் பெறக்கூடியவர்களுக்கு உதவி செய்து தொழில் பெற்றுக் கொடுக்கிறோம் வேறுசிலர் தொழில் பெற்றுக் கொடுப்பதாகக் கூறி கட்சிக்குப் பணம் பெற்று வருவதாக புகார் செய்கின்றனர். ஆனால் இவர்கள் எமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களல்ல. எவராயினும் சரி, எமது கட்சிப் பெயரைச் சொல்லி பணம் பெற்றுக் கொள்வார்களேயானால், அவர்களை நீதிமுன் நிறுத்தத் தயங்கமாட்டோம்.

மக்கள் குழு அமைப்பது பற்றி அதிக விரைவில் மந்திரியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவேன். ஒவ்வொரு கிளையும் மக்கள் கமிட்டி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் ஒவ்வொரு கிராமத்துக்குமுரிய அபிவிருத்திகள் என்ன என்ன என்பதை அறிவிப்பதற்குத் தயங்கக்கூடாது. கிராமங்களின் வளர்ச்சிக்கு எம்மாலானத்தைச் செய்வோம்.

வடபிரதேசத்தில் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தீவுப் பகுதி அமைப்பாளர் வழக்கறிஞர் திரு. பி. கதிரவேலு பேசுகையில், பொருளாதாரமும் வேலையில்லாப் பிரச்னையும் நமது பெரும் பிரச்னைகளாக இருந்து வருகின்றனவென்றும் இவைகளைத் தீர்த்து வைப்பதில் சுதந்திரக் கட்சி சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமென்றும் குறிப்பிட்டார்,

7 பேர் கொண்ட கட்டுப்பாடுகமிட்டி. 21 பேர் கொண்ட ஆரசியல் கமிட்டி ஆகியன தெரிவு செய்யப்பட்டன,

# 'ஈழநாடு' ஆதரவில்

# தீபாவளி விழா

## மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

## கலைநிகழ்ச்சிகள்; பரிசுப்போட்டிகள்

தீபாவளிப் பரிசு!

எப்படிக் கிடைக்கும், அதைப் பெறுவது எப்படி?

யாழ் விளையாட்டு அமைப்புக் குழுவினால் வடபகுதிப் பொலிசாரின் ஒத்துழைப்புடன் ஈழநாடு ஆதரவில் இம்முறையும் தீபாவளித் தினத்தன்றுயாழ் கோட்டை மைதானத்தில் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டியும் அன்று மாலை யாழ் திறந்தவெளி அரங்கில் தீபாவளிக் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவிருப்பதை நேற்று முன்தினம் அறிவித்திருந்தோம்.

... தன்று நீங்கள் அவரை அடையாளம் காண வேண்டும். அவர் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறும் இடத்திலும் நிற்பார். பகலில் யாழ்ப்பாண நகர வீதிகளிலும் அவரை நீங்கள் கண்டுபிடிக்கமுடியும்.

ஒரு நிபந்தனை திபாவளி சி[illegible]பிதழாக வெளிவரும் 29-10-70 'ஈழநாடு' வார மலரில் மூன்று பிரதிகளை நீங்கள் கையில் வைத்துக் கொள்ளவேண்டும். திருவாளர் [illegible] கண்டுபிடித்து [illegible] கையில் வைத்தி...

... வழங்கப்படும்.

ஆமாம்; உங்களுக்கு 100 ரூபாய் தீபாவளிப் பரிசு கிடைக்கும்.

### சினிமாப் புதிர்

'திருவாளர்ஸ்டீல்சன்ஸை' அடையாளம் கண்டுபிடிக்கத் தவறினாலும் மற்றும் இருபரிசுகளைப்பெறுவதற்கு இதோ இன்னொரு [illegible] பிருக்கிறது

சினிமாப் புதிர்ப்போட்டியொன்று உங்களுக்குத் தீபாவளிப் பரிசு கிடைப்பதற்காகவே நடத்தப்படுகிறது. சினிமாப் புதிர்ப் போட்டி — விபரம்இன்னும்...

### பஸ் சேவை

கோட்டை, புதன்

முக்கிய பட்டினங்களுக்கும் பிரதான இடங்களுக்கும் புனித நகரங்களுக்கும் போயாதினங்களில் அரசாங்கம் விசேஷ பஸ் சேவைகளை ஆரம்பிக்க விருக்கிறது.

முதன் முதலில்ஹொரணையில் இருந்து கண்டிக்கும் கொழும்பில் இருந்துமற்றும் சில முக்கிய இடங்களுக்கும் பரீட்சார்த்தமாக மேற்படி விசேஷ பஸ் சேவை நடைபெறவிருக்கிறது இதன்பின்னர் நாட்டின் இதர பகுதிகளுக்கும் இவ்விசேஷ பஸ் சேவை விஸ்தரிக்கப்படும் எனத் தெரிய வருகிறது இவ்விசேஷ பஸ் சேவையினால் இ. போ. ச. வுக்கும் உல்லாசப் பிரயாண சபைக்கும் மேலதிக வருவாய் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## காலி பேஸ் கரையிலே

கடந்த 10-ம் திகதி கொழும்பு காலிபேஸ் திடலில் சுமார் 5000 டாக்சிகள் நின்றன.

கொழும்பிலுள்ள அத்தனை டாக்ஸி சாரதிகளும் பொலிஸ் இம்சையை எதிர்த்து வேலைநிறுத்தத்தில் இறங்கியதே இதற்குக்காரணம்.

எங்கும் வேலைநிறுத்தம் என்பதே பேச்சாகவும் மூச்சாகவும் இருக்கும் சமயத்தில் டாக்ஸிவாதிகள் மட்டும் சும்மா இருப்பார்களா என்ன.

காலிபேஸ் திடலில் வேறு சில காட்சிகளையும் இப்போது காண முடிகிறது. பல்வேறு வேலை நிறுத்தக்காரர்களும் சுலோகஅட்டைகளைத் தாங்கிய வண்ணம் அமைதியாகவும்அணி அணியாகவும் அங்கு நின்று பாதசாரிகளையும் காரில் செல்பவர்களையும் கவர்ந்து வருகிறார்கள். அவர்களில்ஆண்களும் உண்டு. பெண்களும் உண்டு.

நீலக்கடலின் ஓரத்திலே நித்தம் தவம்செய்யும் அழகான பசும்புற்தரையில் இந்தக் காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவருவதாய் உள்ளன.

ஆதரவாளர்களும் அனுதாபிகளும் வேலை நிறுத்தக்காரர் குலுக்கும் உண்டியல் தகரங்களில் லோட்க்' லொடக் என்று நாணயங்களைப் போடுவதையும் ஒரு பக்கம் காண்கிறோம்.

காலஞ்சென்ற தொழிற் சங்கத் தலைவர் திரு ஏ. ஈ. குணசிங்க முட்டிக்காசு வாங்கி தொழிலாளர் நிதிக்குப் பணம் சேர்த்தார் என்பதைப்பலர் அறிந்திருப்பார்கள். அதேபோல் எல்லாத்தொழிற் சங்கங்களுமே முட்டிக்காசுகளைச் சேர்த்து வருகின்றன.

காலிபேஸ்திடல் எத்தனையோ சரித்திரங்களைக் கண்டது. பெரிய பெரியஅரசியல் தலைவர்கள் விடுதலை வீரர்கள் விளைந விளையாட்டுக்காரர்கள் ஆகியவற்றைக் கண்ட மைதானம் அது.

1939-ம் ஆண்டு பண்டித ஜவகர்லால் நேரு மேடையிலிருந்து கீழே பாய முயன்றது இந்த மைதானத்தில்தான்.

மேடையை நோக்கிக் கற்களை வீசிய விஷமிகள் மீது பாய முயன்ற பண்டிதரை அதிகாரிகள் மிகவும் சிரமத்துடன்அப்போது தடுத்து நிறுத்தினர்.

ஒரு காலத்தில் ஆசியாவிலேயே சிறந்த குத்துச் சண்டை வீரர் எனப்புகழ் பெற்றிருந்த 'கன்போட் ஜேக்' பல ஆண்டுகளுக்குமுன் இந்த மைதானத்தில் மாயாஜாலவித்தைகள் பலவற்றைச் செய்து காட்டி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.

அப்பாஸ்போன்ற அல்ஜீரிய விடுதலைப் போராட்டத் தலைவர்களை இந்த மைதானத்தில் இலங்கை மக்கள் மகத்தான முறையில் வரவேற்றார்கள்.

20 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பலர் இங்குவந்து காலிபேஸ் மைதானத்தில் காற்றுக்கும், கடல் அலைகளுக்கும் மத்தியில் கன்னித் தமிழை அடுக்குச் சொல்லில் அழகாகப்பேசி மகிழ்வித்தார்கள்.

1952-ம் ஆண்டு ஹர்த்தால் காலிபேஸ் மைதானத்திலேயே பிறந்தது. காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா, திரு, ஜி. ஜி. பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் அன்று மேடையில் தங்கள் குரல்களை முழக்கிக் கடல் முழக்கத்துடன் போட்டியிட்டார்கள்.

கொழும்பில் காலிபேஸ் மைதானத்தைப் போல் சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையும் புகழ்பெற்றதாகும். உலகிலேயே இரண்டாவது சிறந்த கடற்கடற்கரை என்பதாலல்ல அது.

பல சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளைக் கண்டு சரித்திரப் பிரசித்திபெற்றது அந்தக் கடற்கரை. ஒருகாலத்தில் லோகமான்ய திலகர், அரவிந்தர், விபினசந்திரபாலர் போன்ற மிகப் பெரும் தலைவர்கள் ஒலிபெருக்கியின் உதவி இன்றியே, சொந்தத் தொண்டையை ஒலிபெருக்கிகளாகக்கொண்டு அனைவரும் வியக்கும் வண்ணம் அற்புத முழக்கம் செய்தது இந்தச் சென்னைக் கடற்கரையில் தான்.

தமிழகத்துக்கு சென்னைக் கடற்கரை எப்படியோ அதேபோல் ஈழத்துக்கு காலிபேஸ் கடற்கரை ஒரு சரித்திர சின்னமாகி வருகிறது. இன்னும் எத்தனை எத்தனை காட்சிகளையோ நாம் காணப் போகிறோம். அங்கே.

—மணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கேற்ற கல்வித்திட்டத் தைக் கொண்டுவருகிறோம் என்று ஆட்சிபீடத்திலேறிய அரசாங்கங்கள் ஒவ்வொன் றும் சொல்லிவந்திருக் கின்றன. கல்விஅமைச்சின் பொறுப்பை ஏற்கும் ஒவ் வொரு அமைச்சரும் இதைத் தான் சொல்லிவந்திருக் கின்றார். ஆனால் இதுவரை நாட்டுக்கேற்ற கல்வித்திட்டம் வந்ததாகக் காணோம். ஆசிரியர் இடமாற்றம், ஆசிரி யர் நியமனம், போதனு மொழிப் பிரச்னை ஆகியவை களிலேயே கல்வி அமைச்சு காலத்தைச் செலவழிக்க வேண்டியேற்படுகிறது.

ஆசிரியர் இடமாற்றப் பிரச்னையில் ஆசிரிய சங்கங் களேயும் கலந்தாலோசனை செய்து ஒரு திட்டம் வகுக் கப்பட்டிருந்தால் ஆசிரியர் களுக்கு அநாவசியமான தொல்லையும் கல்விஅமைச் சுக்குத் தேவையற்ற தலை

யும் வேறுபடுத்தச் செய் திருக்கிறதென்றால் மாண வர்களை விட்டுவைக்கவா போகிறது.

ஆனாலும் அமைச்சர் கூறியுள்ளதுபோல் கட்சி அரசியல் விவகாரங்களை ஆசிரியர்கள் பாடசாலைக ளுக்கு வெளியே வைத்து விட்டு மாணவர்களுக்கு அரசியல் அறிவை மட்டும் புகட்டினால் நல்லது. அரசியும் பாடப்புத் தகங்களுமே கட்சி அர சியலாகிவிட்ட இக்காலத் தில்அரசியலிலிருந்து ஆசி ரியர்களோ மாணவர் களோ ஒதுங்கியிருக்கமுடி யுமா?

ஆனாலும் நல்ல பிரஜை களை உருவாக்கும் மகத் தான, புனிதமானபணி ஆசிரியர்சமூகத்தில் தங்கி யிருக்கிறதென்பதை ஆசி யர்கள் அறியாதவர்க ளல்ல!

ஆசிரியர்கள்

# 'உரிமைகளைப் பெற ஒன்று சேரவேண்டியது அவசியம்'

உரும்பராய், புதன்

''நூற்றைம்பது வருடங்க ளுக்கு முன்இந்த நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டு உழைத்தவர்கள் மிஷனரி மார்களே. அந்தக் காலத்திலிருந்து உயர்ந்து வந்த ஆசிரிய சமுதாயத் தின் தற்போதைய நிலை கவ லைக்கிடமானதா யுள்ளது. ஐரோப்பிய நாட்டுக் கல்வி முறை மிகவும் முன்னேற்ற மாயிருந்தது நமது நாட்டுக் கல்வியோ அடிமை முறை யின் அடிப்படையிலேயே அ மைந்திருந்ததுஎன்றால்மிகை யாகாது. ஆங்கிலத்துக்குரிய அந்தஸ்து அரசியல் ரீதியில் சிங்களமொழிக்குக் கிடைத் துக் கொண்டிருப்பதால் தமி ழருக்கு நியாமான தமிழ் மட்டும் தான் எதிர்காலத் தில் இருக்கலாம் போலும். ஆகவே சுயபாஷை ஆசிரி யர்கள் விசேடமாகத் தமி ழாசிரியர்கள் தமிழர் தம் உரிமைகளுக்காகப்போராட வேண்டியது முக்கியமானது.

சென்ற திங்கட் கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் 27வது வருடா ந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அகில இங் கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

## சாதியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆகை யால் இங்கும் தனி இனப் பிரிவினையை விட்டுச் சாதியை ஒழித்துச் சமத்து வம் காணவேண்டும்''.

நியமன எம். பி திரு எம். ஸி சுப்பிரமணியம் பேசுகை யில் குறிப்பிட்டதாவது:

ஜாதிக்கொடுமை இந்த நாட்டில் அக்கிரமாக அமுல் செய்யப்பட்டிருந்த தென்ப தன் சின்னமாகவே திரு. முதலி சின்னத்தம்பியின் மரணம் அமைந்துள்ளது.

இந்த நாட்டில் ஜாதிய பிரச்னை தீர்வதற்கு பொரு ளாதார சமத்துவம் ஏற்பட வேண்டும். சிறுபான்மை மக் கள் பொருளாதார சமத் துவத்தைப்பெற அரசிடம் நமது சமூகத்தவர் விசேட சலுகைகளைப் பெறவேண் டும்.

திரு. அல்பிறட் துரை யப்பா பேசுகையில் குறிப் பிட்டதாவது: சட்டமும், இயக்கமும் தேவை தான் ஆனால் அதற்கூடாக பெரும் பான்மை மக்களிடையே மனமாற்றமும் ஏற்பட வேண்டும்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வண்டிச் சவாரிப்போட்டி யும் அன்று மாலை யாழ் திறந்தவெளி அரங்கில் தீபாவளிக் கலைநிகழ்ச்சி களும் நடைபெறவிருப் பதை நேற்று முன்தினம் அறிவித்திருந்தோம்.

உங்களுக்கும் தீபாவளிப் பரிசு கிடைக்கும் என்றும் அறிவித்திருந்தோம்.

பரிசுபெறுவது எப்படி என்றுதானே கேட்கிறீர்கள். சுலபம் தான்!

இன்னும் சிலதினங்களில் 'திருவாளர் ஸ்டீல்சன்ஸ்' உங்களுக்கு அறிமுகப்படுத் தப்படுவார். அதாவது அவ ரது புகைப்படம் ஈழநாடு பத்திரிகையில் வெளியிடப் படும். தீபாவளித் தினத்

20-10-70 'ஈழநாடு' வார மலரில் மூன்று பிரதிகளை நீங்கள் கையில் வைத்துக் கொள்ளவேண்டும். திரு வாளர் ஸ்டீல்சனை நீங் கள் கண்டுபிடித்து விட்டீர் களானால் கையில் வைத்திருக் கும் 'ஈழநாடு' பத்திரி கையினால் அவரின் தோளில் மெதுவாகத்தட்டி ''திருவா ளர் ஸ்டீல்சன்ஸ் உங்களைக் கண்டுகொண்டேன்'' என்று கூறவேண்டும்.

உங்களால் அடையாளம் கண்டுகொள்ளப் பட்டவர் உண்மையிலேயே ''திருவா ளர் ஸ்டீல்ஸன்ஸ்'' என்றால் உங்களுக்கு அன்று மாலை திறந்தவெளிஅரங்கில் நடை பெறும் கலைவிழாவில் பரிசு

# வெற்றியீட்டுவோருக்கு தங்கப்பதக்கம் பரிசு

தீபாவளித் தினத்தன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ் கோட்டை மைதானத்தில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஆரம்பமாகும். 'ஏ.' 'பி.' பிரிவுகளுக்கிடை யில் நடைபெறும் இப் போட்டிகளில் இரட்டைத் திருக்கல் வண்டிகளே பங்குபற்றும்.

'ஏ' பிரிவு வெற்றியீட்டும் வண்டிலுக்கு முதற்பரிசாக 300 ரூபாய்க்குக் கூடுதலான பெறுமதியுடைய தங்கப் பதக்கமும் 'பீ' பிரிவில் வெற்றியீட்டும்வண்டிலுக்கு 200 ரூபாய்க்குக் குறையாத பெறுமதியுடைய தங்கப் பதக்கமும் பரிசாக வழங் கப்படும்.

இவை தவிர இரண்டாம் மூன்றும் பரிசுகளும் உண்டு.

தீபாவளியென்றால் தீப அலங்காரம் இல்லாமலா! அதுவும் திறந்தவெளி அரங் கில் உங்கள் கண்ணையும் கருத்தையும் கவரச்செய் யும் அதுமட்டுமா?

வாணவேடிக்கை இல்லா மல் தீபாவளி விழாவா?

இருக்கிறது வாண வேடி க்கை

தீபாவளிவிழா பற்றிய விபரங்களுக்குத் தொடர் ந்து படியுங்கள் 'ஈழநாடு'.

## தீபாவளி விழா

'ஸ்டீல்ஸன்ஸ்' திரு. எம். பூபாலசிங்கம் ஜே பி., யாழ் உலோகத் தொழிற்சாலை திரு. கே இராஜலிங்கம் ஆகியோரை இணைக்காரிய தரிசிகளாகக் கொண்ட இவ் வமைப்புக்குழுவில் யாழ். மாநகரசபை மராமத்துப் பொறியியலாளர் திரு இ. வைத்திலிங்கமும் அங்கம் வகிக்கிறார். இக்குழுவினர் தீபாவளி விழாவைச் சிறப் பாக நடாத்துவதற்கான வேலைகளைத் துரிதமாகச் செய்துவருகின்றனர்.

இதோ இன்னொரு ... பிருக்கிறது. சினிமாப் புதிர்ப்போட்டி யொன்று உங்களுக்குத் தீபாவளிப் பரிசு கிடைப்ப தற்காகவே நடத்தப்படு கிறது. சினிமாப் புதிர்ப் போட்டி — விபரம்இன்னும் இரு தினங்களில் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும்.

## மாணவர்களே...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

காது. திறமைக்கே இட மளிக்கப்படும்.

புதிய கல்வித்திட்டம் தேசீய அடிப்படையில் பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணும்'' எனக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

பிற்பகல் திரு. எல். எம் பெரேரா தலைமையில்நடந்த பொதுக்கூட்டத்தில் திரு. ஆரியதாசா பேசுகையில், ஆசிரியர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லையென்றும், சகல ஆசிரியசங்கங்களும் ஒருங்கிணைந்து, ஒருதலைமை யில் இயங்கி மகஜர் சமர்ப் பிக்கும் அளவுக்கு நிலைமை மாறவேண்டுமென்றும் சொன்னார்.

## நம்பர் தமிழில் பேசினார்

யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபரான திரு ஏ ஈ. தம்பர் தமிழில் பேசி னார். தமிழில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, சகோதர உண ர்வுடன் வைபவத்தில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சியடை வதாகக் கூறிப் பேச்சை அவர் ஆரம்பித்தார், அவர் கூறியதாவது:-

ஆசிரியர்களிடம் புனித உணர்வு இருத்தல் வேண் டும். கெட்டிக்கார மாண வர்களுக்குக் கல்விபோதிப்ப தில் மட்டும் திறமைஇல்லை அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் தான்திற மையுண்டு ஆசிரியர்கள் புனித உணர்வுடனும் கட மையுணர்ச்சியுடனும் மாண வர்களை வளர்த்தெடுக்க வேண்டும்'

குறுகிய வகுப்புவாதங் களைக் களைந்து தேசிய ஒற் றுமைக்கு ஆசிரியர்கள் வழி அமைக்கவேண்டும் எனவும் திரு. தம்பர் சொன்னார்

## நன்றி நவிலல்

திருமதி ப. சிவக்கொழு ந்து அவர்களின் மரணச் சடங்கிற்கு நேரில் வருகை தந்தும், தந்திகள் மூலமும் எமது துக்கத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக் கும் எமது நன்றியைத்தெரி வித்துக் கொள்ளுகின்றோம்.

சி. பரராசசிங்கம், கி. தர்ம ராசா, 12-ம் வட்டாரம், புங்குடுதீவு. 2409

சேவை விஸ்தரிக்கப்படும் எனத் தெரிய வருகிறது. இவ்விசேஷ பஸ் சேவையி னால் இ. போ. ச. வுக்கும் உல்லாசப் பிரயாண சபைக் கும் மேலதிக வருவாய் கிடைக்கும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

நிலைதான்.

மேடையை நோக்கிக் கற் கள் வீசிய விஷமிகள் மீது பாய முயன்ற பண்டிதரை அதிகாரிகள் மிகவும் சிர மத்துடன் அப்போது தடுத்து நிறுத்தினர்.

துக்கு காலிபேஸ் கடற்கரை ஒரு சரித்திர சின்னமாக வருகிறது. இன்னும் எத் தனை எத்தனை காட்சி களையோ நாம் காணப் போகிறோமோ, அங்கே.

—மணியம்

# தமிழ் மாணவர் சிங்களம் படிக்க வேண்டுமா? - 'அமிர்' விளக்கம்

சுழிபுரம், புதன்

''தமிழ் பேசும் மக்களின் தனித்தன்மை இந்த நாட் டில் காப்பாற்றப்படவேண் டும். தனி இனமாக வாழும் போதுதான் தமது மொழி கலாச்சாரம் ஆகியவற்றை காக்கமுடியும், வளர்க்கமுடி யும். இன்று தமிழ் மக்களை அழித்துவிடவும், பிளவு படுத்திவிடவும் பலர் எமக் குள்ளேயே பல்வேறு காரி யங்களை செய்துகொண்டு இருக்கின்றனர். சிலர் கன வுலகில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்.

தமிழ் மாணவர்களை தப் பான வழியில் கொண்டு சென்று எங்கும்தேவையற்ற வர்களாக்க முயல்கின்றனர். தமிழ்மக்கள்சிந்தித்துசெயல் படவேண்டும்''

இவ்வாறு வழக்கம்பறை யில் நடைபெற்ற ''தமிழ் மாணவர் சிங்களம் படிக்க வேண்டுமா?'' என்னும் விட யப்பற்றி நடைபெற்ற கருத் தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட் டைத் தொகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். கருத்தரங் குக்கு பண்டிதர் ப. இராச குரு தலைமைவகித்தார்.

திரு. அ அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், ஆங் கிலேயர் நம்மை ஆண்ட காலத்தில் சிங்கள மக்கள் ஆங்கில அரசை எதிர்த்த னர் அதனால் தமிழ் மக்க ளுக்கு கல்விவசதியை உண்டு பண்ணி அரச உத்தியோகங் களையும் வெளிநாட்டு உத்தி யோகங்களைப்பெற வய்ப் பும் ஏற்பட்டன அப்படி யிருந்தும் பத்து வீதமான வர்களே உத்தியோகம் பெறும் பேற்றையும் ஆங் கில மொழி கற்கும் வாய்ப் பையும் பெற்றனர். இன்று சிங்கள மொழியைக் கற்றால் உத்தியோகங்களைப் பெற் றுக்கொள்ளலாம் எனக் கூறப்படுகின்றது. மொழி யடிப்படையில் தெரிவதாக இருந்தால் எல்லோரும் சிங் களத்தை கற்றிருந்தால் ஒரு தமிழ் ஆசிரியரைத்தானும் நியமிக்கமுடியாத நிலைமை க்கு ஆளாவோம். தமிழர் களை ஒதுக்கும்வகையில் காரி யங்கள்நடைபெற்றுவருகின் றன. பண்டாரநாயக்கா சிங் களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்தாலும், நியாய மான அளவு தமிழ்மொழி உபயோகம், அரசாங்க ஊழி யர்களுக்கு சிங்கள மொழி கற்றல் போன்ற விடயங்களி லும் தாய்மொழி மூலம் கல்வி வசதியளித்தல் என் பனபோன்ற பல்வேறு பாது காப்புகளையும்எமக்குகிடைக் கச்செய்யப்பட்டன. சிங்கள மொழியைக் கற்பதால் எம்மை நாமே அழித்துக் கொள்பவர்களாகவும், இந்த நாட்டிலுள்ள நீர்கொழும்பு புத்தளம் போன்ற பகுதிகளி லுள்ள தமிழ் மக்கள்போல் பேரன் தமிழ்பாஷைமட்டும் தெரிந்தவனாகவும் மகன் சிங்களம்மட்டும் தெரிந்தவ னாகவும் வாழும்நிலைமை ஏற் பட்டுவிடும். சிங்கள மொழி மேல் எவ்வித துவேஷமும் எமக்கு இல்லை. தமிழ்மக்களை நசுக்கி அழித்து அவர்கள் உரிமையைப் பறிப்பதையே நாம் எதிர்க்கின்றோம். தாய் மொழி மூலம் கல்வி கற்ப தால் மட்டுமே ஒருவன் பூரண அறிவைப்பெற்றுக் கொள்ளலாம். இன்று ரஷ்யா, லுமும்பா சர்வகலா சாலையில் கல்விகற்கும் இலங் கையைச் சேர்ந்த ஓர் மாண வன் முதல் ஒன்பது மாதமும் அந்த நாட்டு மொழியைக் கற்று பின்னரே சர்வகலா சாலைப் படிப்பைத் தொடர் கின்றான். அதேபோல் இந்த நாட்டிலும் மேல்வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் பிள்ளைகள் சிங்களத்தை இரண்டாவது பாஷையாக வும், சிங்களப்பிள்ளைகள் தமிழ் அல்லது ஆங்கிலம் இர ண்டாவது பாடமகவும்கற்க அரசு உதவுவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் அது அமுல் நடத்தப்பட வில்லை அரசியல் அமைப்பில் பெரும் மாறுதல்கள் ஏற்படு த்தப்பட்டு வருகின்றன. எமது சட்ட வரம்புகளே தலைகீழாகமாறும் போலுள் ளன. பொறுத்திருக்கின் றோம். நன்மைகிடைக்காத விடத்து மேற்கொண்டு நட வடிக்கை எடுப்போம்.

## பொறுப்பேற்றனர்

கொழும்பு, செவ்

கோலாலம்பூரில் நடை பெறும் றப்பர் உற்பத்தி நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாகக் கோலாலம்பூர் சென்றுள்ள அமைச்சர் டாக்டர் கொல் வின் ஆர். டி. சில்வா நாடு திரும்பும்வரை தோட்டத் தொழில், அரசியல் அமைப் புத் திட்ட அமைச்சின் உதவி மந்திரி திரு. காரியவாசத்தி டம் தோட்டத்தொழில் அமைச்சும், வெளிநாட்டு, உள்நாட்டு, வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின விடம் அரசியல் அமைப்புத் திட்ட அமைச்சும் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

---

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை

விசாலாட்சியின் அன்புக் கணவரும், துரை அன் கோ உரிமையாளர் கி. துரைராசா, பரந்தன் இர சாயனத் தொழிற்சாலையைச் சேர்ந்த கி. தியாக ராசா, திருமதி க. செல்லமுத்து, திருமதி ச செங் கமலம் ஆகியோரின் தந்தையும், டைனமோட்டோ வேர்க்ஸ் உரிமையாளர் கே கணபதிப்பிள்ளை, டாக் டர் அ கிருஷ்ணசாமி, திருமதி தம்பிராசா ஆகி யோரின் மாமனருமான சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று மாலை 3 மணியளவில் காரைநகர் மயானத்துக்கு ஈமக்கிரியைக்காக எடுத் துச்செல்லப்படும்.

விக்காவில், காரைநகர்.

தகவல்; கி துரைராசா. 2143

---

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணமணி

பொல்பிட்டிகம உதவி வைத்திய அதிகாரி சு கதி ரேசு அவர்களின் அருமை மனைவியும், நயினாதீவு இளைப்பாறிய தபால் அதிபர் விசாகப்பெருமான் தம் பதிகளின் ஏகபுத்திரியும், சுமித்திரா, பிரணதார்த் திகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கொழும்பு பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் இராமச்சந்தி ரனின் சகோதரியும், நயினாதீவு திருமதி புவனேஸ்வரி கோபாலபிள்ளை, வடிவாம்பிகை கணேசு ஆகியோ ரின் மைத்துனியுமான கிருஷ்ணமணி அகால மரணம் அடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நயினாதீவு மயா னத்தில் நடைபெறும். 2142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org